
திருவள்ளுவர்

## திருக்குறள்

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

அதிகாரம் - 8 - அன்புடைமை

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# டிசம்பர் செய்திமடல்

( கார்த்திகை - மார்கழி )

அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர்:ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்க்கும் அதுவே துணையாக நிற்கின்றது

The unwise deem love virtue only can sustain,
It also helps the man who evil would restrain

## பள்ளியின் அறிவிப்புகள் !!

1. நமது பள்ளியின் குழந்தைகள் தின கொண்டாட்டம் வெற்றிகரமாக நவம்பர் மாதம் 16ஆம் தேதி நடைபெற்றது. சிறந்த பங்கேற்பாளர்களின் விவரங்களையும் புகைப்படங்களையும் நம் பள்ளி முகநூல் இணைப்பில் காணலாம். RI Tamil School FB link

2. முதல் பருவ தேர்வு நவம்பர் 22ஆம் தேதி வெற்றிகரமாக நிறைவடைந்தது. மேலும் பெற்றோர் மற்றும் ஆசிரியர் சந்திப்பு டிசம்பர் 6ஆம் தேதி நடைபெற உள்ளது.

3. NETS குழந்தைகள் தின நிகழ்வில் பங்கேற்க நமது பள்ளி குழந்தைகளை ஊக்குவிக்கிறோம். தகவலுக்குப் பார்க்க : NETS Upcoming Events

## பள்ளி அட்டவணை டிசம்பர் மாதம்

December 24

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 ✗ | 28 |
| 29 | 30 | 31 | | | | |


RITamilSchool Calendar

### விடுகதை விடைகள் !

1.மஞ்சள் 2.மாதுளம்பழம் 3.இதயம் 4.உப்பு 5.அடுப்புக்கரி 6.ஒட்டகம் 7.கரண்டி 8.பாயாசம் 9.பென்சில் 10.வெண்டைக்காய்


## மயிலின் கருணை !

ஒரு காட்டுல ஒரு மயில் வாழ்ந்துகிட்டு வந்துச்சு.



அந்த மயில் ரொம்ப அழகா இருந்துச்சு, அதே நேரத்துல மற்ற பறவைகள் கூடவும் ரொம்ப நட்போடு கருணையோடு பழகி வந்துச்சு.
ஆனா மயிலோட அழக பார்த்த மத்த பறவைகள், மயில் மேல பொறாமா பட்டுச்சு. அழகா இருக்கிறதுனால மயில் எப்பவும் திமிரோடதான் இருக்குமுன்னு, அதுங்களே முடிவு பண்ணிக்கிச்சு.

அதனால், மற்ற பறவைகள் எல்லாம் மயில் கூட சேராம தனியாவே இருந்துச்சு. மயில் நட்போட பேச வந்தா கூட மயில தவிர்த்துட்டு வேற பக்கமா போயிடுமா அந்தப் பறவைகள்.




அந்த காட்டுல குளிர்காலம் ஆரம்பிச்சுச்சு, அப்பதான் புதுசா குஞ்சு பொருச்சிருந்த ஒரு குருவி, தன் குளிரையும் தன்னோட குஞ்சுகளோட குளிரையும் எப்படி போக்கிக்கிடறதுனு தெரியாம ரொம்ப கஷ்டப்பட்டுச்சு, அந்த குருவி.

அப்ப அந்த பக்கமா வந்து அந்த அழகான மயில், குளிர்ல கஷ்டப்படுற குருவியையும் அதோட குஞ்சுகளையும் பார்த்து ரொம்ப கஷ்டப்பட்டுச்சு.



உடனே தன்னோட தொகையில இருந்து சில இறகுகளை பிச்சு குளிருக்கு இதமா, குருவிக்கும், அதோட குஞ்சுகளுக்கு போத்தி விட்டுச்சாம் அந்தமயில்.

மயிலோட தோகை, குருவியயும், குருவி குஞ்சுகளையும் குளிர்ல இருந்து நல்லபடியா காப்பாத்துச்சு. இத பார்த்த எல்லா குருவிகளும் இவ்வளவு நல்ல மயில அதோட தோற்றத்த மட்டும் வச்சு இத்தனை நாள் தப்பா நினச்சுட்டமேனு ரொம்ப வருத்தப்பட்டுச்சுங்க.



அன்றிலிருந்து, அந்த காட்டுல எல்லா குருவிகளும், பறவைகளும், மயில்களும் ஒற்றுமையா சந்தோஷமா வாழ்ந்துச்சாம்....

நீதி : ஒருத்தரோட தோற்றத்தை வச்சி அவர் நல்லவர் என்று எப்போதும் நம்ப கூடாது. அதே மாதிரி ஒருத்தரோட தோற்றத்தை வச்சி அவர் கெட்டவர் என்று எப்பொழுது முடிவு செய்யக்கூடாது.

வெற்றி என்பது நிலையானது அல்ல, அது தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவு.

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# டிசம்பர் செய்திமடல்


(கார்த்திகை - மார்கழி)

Success is not permanent, it's the result of continuous efforts.

## முத்தமிழ் முத்துக்கள்

### சிலம்பாட்டம்





சிலம்பாட்டம் என்ற கலை மிகவும் பழமையானது. இக்கலை போர்க்களங்களில் ஒன்றாக இருப்பினும் பொழுதுபோக்கு கலையாகவும், உடற்பயிற்சி சார்ந்ததாகவும், கரகாட்டத்தின் துணை ஆட்டமாகும் நிகழ்கிறது.

இக்கலையை நிகழ்த்த காலவரையறை கிடையாது. சிலம்பாட்டம் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பெரும்பாலும் நிகழ்கிறது.

இன்றும் சிலம்பாட்டம் வழக்கில் உள்ளது. இக்கலையை பயில்வதின் மூலம் வர்மக்கலையும் அறிய முடியும் என்பதால் இன்றும் சிலம்பாட்டத்தை பயில்வதற்கு பலரும் முன் வருகிறார்கள்.

## நினைவு நாளேடு

### குளிர்கால சங்கிராந்தி

குளிர்கால சங்கிராந்தி (winter solstice) என்பது பூமியின் சரி பாதி, அளவு, சூரியனில் இருந்து வெகு தொலைவிற்கு சாய்ந்திருக்கும் சரியான தருணத்தைக் குறிக்கிறது. இது பொதுவாக டிசம்பர் 21 அல்லது 22 அன்று நடக்கும்.

குறைவான சூரிய ஒளி பூமியை அடைவதால், குளிர்கால சங்கிராந்தியானது ஆண்டின் மிகக் குறைந்த பகல் நேரத்தைக் கொண்ட நாளாகும், இது ஆண்டின் குறுகிய நாள் என்று அழைக்கப்படுகிறது.

### கிறிஸ்துமஸ்

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. 'கிறிஸ்துமஸ்' என்ற பெயர் கிறிஸ்துவின் மாஸ் (அல்லது இயேசு) என்பதிலிருந்து வந்தது.

கிறிஸ்மஸ் காலம் கொடுப்பதற்கான பருவம் என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் மரத்தை அலங்கரித்தல், பரிசுகளைப் பகிர்தல் மற்றும் கரோல்களைப் பாடுதல் ஆகியவை அடங்கும்.

## டிசம்பர் மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :

- அகில் பிரபு
- அர்ணா சசின்குமார்
- கவிநயலட்சுமி தமிழ்வாணன்
- சாய்ஷ் இரவிக்குமார்
- சாரா விஜய்
- நவிலன் தமிழதியன் இந்திர மோகன்
- பைரவ் சங்கர் தீபக்தரன்
- மதுமதி பாலகுமாரன்
- யகேஷ் செல்வகணபதி
- லயா பிரியவர்த்தனன்
- ஜெரமயா ஜெப்ரி

டிசம்பர் மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும் நம் பள்ளி செல்வங்களுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

## பள்ளிக் கண்மணியின் காகித கைவினை !!



அக்ஷரா சாய் விக்னேஷ்

நிலை 2

## கண்டுபிடியுங்கள் !

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | க | ரா | வூ | ச | றி | ன் | ப |
| கு | உ | ர | ல் | ழ் | ஞ | ங் | சி |
| ஊ | ரு | ட் | டி | கு | ரு | வி | ல |
| ஒ | ட் | ட | க | ம் | எ | ஜ | ந் |
| தை | த் | று | சி | டி | று | ம் | தி |
| கே | யெ | தி | ம | ன் | லை | ட் | ட |
| து | பு | ம் | று | எ | ணா | க | ந |
| லி | டை | ந | ரி | ம் | லி | ஓ | த |

கரடி ஓணான் நரி எறும்பு சிலந்தி

சிறுத்தை ஒட்டகம் பன்றி குருவி எலி

உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:
கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை 15-ஆம் தேதிக்குள் NEWSLETTER.RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இணையதளம்: HTTPS://WWW.RITAMILSCHOOL.ORG/
முகநூல்: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL